ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2283/43 - 2022 ජුනි මස 10 වැනි සිකුරාදා - 2022.06.10

*2283/43 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*கட்டளை இலக்கம் 83*

**2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**
**(திருத்தியமைக்கப்பட்டது)**

20(5) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, கீழே தரப்பட்டுள்ள அரிசி வகைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் கூடுதலான சில்லறை விலைக்கு மேலாக வழங்குநர், உற்பத்தியாளர், தயாரிப்பாளர், விநியோகத்தர் அல்லது வியாபாரி எவரும் விற்பனை செய்யவோ, வழங்கவோ, விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனைக்கு வெளிப்படுத்தவோ, விற்பனைக்காகக் காட்சிப்படுத்தவோ முடியாதென இத்தால் கட்டளையிடுகின்றது.

| வகைகள் | ஆகக்கூடுதலான சில்லறை விலை |
|---|---|
| வெள்ளை/சிவப்பு பச்சை அரிசி (உள்நாட்டு அரிசி) | ரூபா 210.00/ கி. கிராம் |

இக்கட்டளை, 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

**மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க** (ஓய்வுபெற்ற),
**தவிசாளர்.**

கொழும்பு,
2022, யூன் 10.

1A - PG 5428 — 106 (2022/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.